பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 05 வியாழக்கிழமை 21.08.2025 கதிர் 285

## இனி இது ரகசியம் அல்ல!



கடந்த வாரங்களில் வடக்கு கிழக்கில் கதவடைப்புப் போராட்டம் அதற்கெதிரான சகுனி வேலைகளில் தமிழர்ஒற்றுமைபற்றிப்பாடம்எடுக்கும் தரப்புக்களோ ஈடுபட்டமைபோன்ற 2

## தாயகம் திரும்புவோரைக் கைது செய்வதன் மூலம் சர்வதேசச் சட்டங்களை மீறிவருகின்றது இலங்கை

### நாடாளுமன்றத்தில் சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அனுசரனையுடன் தாயகம் திரும்புவோரை கைது செய்வதன்மூலம் இலங்கை அரசு சர்வதேச சட்டங்களைமீறுகிறது-நாடாளுமன்றஉறுப்பினர் சத்தியலிங்கம் குற்றச்சாட்டு...

இலங்கையின்உள்நாட்டுப்போர்காரணமாக பாதிக்கப்பட்ட இந்தியாவுக்கு அகதிகளாக சென்றவர்கள் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் ஆணையத்தின் அனுசரணையுடன் தாயகம் திரும்பும்போது விமான நிலையத்தில் கைதுசெய்யப்படுவதானதுசர்வதேசசட்டங்களை மீறும் மிகமோசமான செயற்பாடாகும் என இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்மருத்துவர்.பத்மநாதன்சத்தியலிங்கம் ஆளும்தரப்பை குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் உள்நாட்டுப்போர் 6

## வடக்கு கிழக்கில் ராஜபக்சக்களின் அவதாரங்கள் தமிழ் தலைவர்களை இப்படிச் சாடிய அமைச்சர்

இந்தியாவில்உள்ளஇலங்கைஅகதிகள் அனைவரையும் அன்புடன் பொறுப் பேற்போம். அவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்புக்களைவழங்குவோம். கைது செய்யப்பட்ட இரண்டு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் உள்ளஇலங்கைஅகதிகளைஇலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அகதிகள் முகாம் ஏன் இடைநிறுத்தியது என்பதை அறியவில்லை. இவ்விடயம் குறித்து அமைச்சு மட்டத்தில் பேச்சு நடத்துவோம். இவ்வாறான கைதுகளை தடுக்க நீதியமைச்சுடன் கலந்துரையாடுவோம். தமிழர்கள்என்பதால் கைது செய்யப்படுவதாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ராஜபக்சக்களில் ஒருசில அவதாரங்கள் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். 6

# மாகாணங்களின் அதிகாரங்களை திரும்ப மத்தியிடமே தாரைவார்க்க முயலாதீர்கள்

### மன்னார் ஆயரைக் கண்டித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

சிலர் அறிந்தோ அறியாமலோ மாகாணசபைகளின் அதிகாரங்களை மீண்டும் மத்தியிடம் கொடுக்க முயற்சிக் கின்றனர். இத்தகைய போக்கு தமிழ்த் தேசிய இனத்தின் அதிகாரப்பகிர்விற்கான போராட்டத்தின் அடிப்படையையே இல்லாமல் செய்துவிடும் என்று ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார்மறைமாவட்டஆயர்ஞானப்பிரகாசம்ஓகஸ்ட்18 அன்று இலங்கை அரசுத் தலைவரைச் சந்தித்து மன்னார் மாவட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார் என்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் தமிழ்நேசன் அடிகளார்ஊடகங்களுக்குஒருசெய்தியைவெளியிட்டுள்ளார். இதில் குறிப்பாக மன்னார் வைத்தியசாலையை மாகாண நிர்வாகத்திடமிருந்து எடுத்து மத்திய ஆளும்தரப்பு அதனை நிர்வகிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையை மத்திய அரசிடம் ஒப்ப டைப்பதற்கானஇதேகோரிக்கைசிலமாதங்களுக்குமுன்னர் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட அமைப்புகளையும் சேர்ந்த அதியுயர் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் 2

## புதிய முறைமையூடாகவேனும் பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளத்தை உயர்த்துவதில் உறுதி

### பெருந்தோட்டத்துறை அமைச்சர் உறுதி

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வரையில் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தில் உறுதியாகவுள்ளோம். இந்தச் சம்பளஅதிகரிப்பைவழங்கஏதேனும்புதியமுறைமை இருக்குமாக இருந்தால் அதனூடாகவேனும் இந்த சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின்போது, தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான பழனி திகாம்பரத்தினால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இதனைத தெரிவித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்பழனி திகாம்பரம், ஆளும்தரப்பு 2

## இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் எதிர்காலத்தில் நாட்டுக்கு அச்சுறுத்தல்

### மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

இலங்கை இந்தியாவுடன் அண்மையில் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தம் எதிர்காலத்தில் இலங்கைக்கு அச்சுறுத்தலாகவே அமையும். இதனைப் பகிரங்கமாகவே கூறுகின்றேன் என்று இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார். நிகழ்வில் தொடர்பில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

இந்தியாவுடன் அண்மையில் கையெழுத் திடப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் எதிர்காலத்தில் எமக்கு அச்சுறுத்தலாகவே அமையும் 7

## பலாலி அபிவிருத்திக்கு இந்தியாவிடம் நிதி பெறுவதில் அரசுக்கு என்ன சிக்கல்?

### நாடாளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி. கேள்வி

யாழ். பாலாவி விமான நிலையத்தின் புனரமைப்புப்பணிகள்6மாதகாலத்திற்குள் முழுமைப்படுத்தப்படும்எனஆளும்தரப்பால் உறுதியளிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளன இருப்பினும் எந்தவொரு முன்னேற்றகரமான செயற் பாடுகளும் ஏன் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல்இருக்கின்றது. விமான நிலையத்தின் இரண்டாம்கட்ட அபிவிருத்திக்குதேவைப்படும்நிதிப்பெறுமதி எவ்வளவு என்பதையும், இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கான நிதியை இந்தியாவிடம் பெற்றுக்கொள்வதில் ஆளும்தரப்பிற்கு என்ன தடை உள்ளது என்றும் 6

## பலாலி விமான நிலையத்தை வெற்றிகரமாக விரிவாக்குவோம்

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் பிமல் தெரிவிப்பு

யாழ் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைப்பதற்கேஎதிர்பார்க்கிறோம். முறையான வணிகதிட்டமிடல்களின்றி இந்த இலக்கை அடைய முடியாது. யாழ். விமான நிலையத்தை விரிவாக்க காணிகளை கையகப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகின்றது. தற்போதுள்ள விரிவாக்கத்திற்கு புதிதாக காணிகள் அவசியமில்லை என்றாலும் மேலும் விரிவு செய்ய வேண்டுமாயின் காணிகள் பெற்றுக்கொள்ள 2

## மலையக மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தியூடாகத் திட்டம்

### அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவிப்பு

சமூக கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத் திறனாக்குவதற்காகவே சமுர்த்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறந்த தெரிவுகளின் அடிப்படையில்தான் தற்போது சமுர்த்தி நலன்புரி திட்டம் வழங்கப்படுகிறது. மலையக பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1995 ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் பிரகாரம் திவிநெகும திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. சமுர்த்தி அதிகார சபை, மேல்நாட்டு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஸ்ரீ லங்கா தெற்கு அபிவிருத்தி நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றை ஒன்றிணைத்தே 2013 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க திவிநெகும திணைக்களம் உருவாக்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் 2017 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம்திவிநெகுமஅபிவிருத்திதிணைக்களம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டது. இன்று சுமார் 40 இலட்சம் பயனாளர்கள் சமுர்த்தி திட்டத்தில் உள்ளார்கள். 250 பில்லியன் ரூபா நிதி இருப்பினை சமுர்த்தி திட்டம் கொண்டுள்ளது.

நடைமுறையில் உள்ள 6

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இன்னோரன்னபரப்பிரம்மவேலைகள்குறித்து பேசியதில் தெற்கு அரசியல் வட்டாரங்களில் நடந்த சில விடயங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இன்று அவற்றைப் பார்க்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பணியிடமான சிறிகொத்தாவில் கடந்த வாரம் திடீரென பொலிஸார் வந்திருந்தனர்.

சிறிகொத்தாவில் உயர் பதவிக்கு ரணில் நியமித்த வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சக்திவாய்ந்த நபரை விசாரிப்பதற்காக தாம் வந்ததாக அந்தப் பொலிஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர். முந்தைய ஆட்சியின்போது வடமேற்கு மாகாணத்தில் நிலம் வழங்குவதாகக் கூறி பணம் பெற்றதாக இந்த அரசியல்வாதி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக தொடங்கப்பட்ட விசாரணைக்காக வாக்குமூலங்களைப் பெற இந்த போலீஸ் குழு சிறீகொத்தாவிற்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், கடந்த காலங்களில் ஐ.தே.க. செயற்குழுவில் உள்ள பலர் சொத்துக்களை வாங்கிய விவகாரம் குறித்து சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இப்படி தம்மைச் சுற்றியும் விசாரணை வளையங்கள் இறுகுகின்றன என்பது தெரிந்ததும் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த நாட்களில் சிறிகொத்தாவில் நடைபெறும் கூட்டங்களுக்கு சிறிய மாருதி கார்கள் மற்றும் சிறிய வேன்கள் வருவதை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்களாம். வேறு பலர் பேருந்துகளில்தான் வருகின்றனராம். இப்படியெல்லாம் செய்தால் தம்மிடம் பணம் இல்லை என்று நினைத்து விசாரணை வளையத்திலிருந்து தப்பிவிடலாம் என்று கணக்குப் போடுகிறார்கள் போலும். நெருப்புக்கோழி மண்ணுக்குள் தலையைப் புதைத்துக்கொண்ட கதைதான் போங்கள்.

.........................................

கடந்த வாரம் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவைச் தேடிச் சென்று சந்தித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அரகலய போராட்டத்தின் பின்னர் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் அரசுத் தலைவரானார். ராஜபக்சக்கள்தான் ரணிலின் ஆதரவின் பின்புலத்தில் இருந்தவர்கள். ஆனாலும் ரணில் அரசுத் தலைவரானதும் ராஜபக்சக்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பெரமுனவையே உடைத்தார். அவர்களில் ஒருபகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு புதிய கூட்டு ஒன்றை உருவாக்கினார். பெரமுன சிதறிப் போவதற்கு அவரே காரணமாக இருந்தார். அதனால் ராஜபக்சக்களுக்கும் ரணிலுக்குமான உறவு அண்மைக் காலத்தில் சுமூகமாக இருக்கவில்லை.

இருப்பினும், திடீனெ இப்போது ரணில் மகிந்தவைச் சந்திக்க நேரம் கேட்டார். ரணிலின் வேண்டுகோளின் பேரில் மகிந்தா அதற்கு நேரம் கொடுத்தார். அங்கு இரு தலைவர்களும் பேசியதில் நாமல் தலைமையிலான பெரமுனவுடன் ஒரு பெரிய கூட்டணிக்குள் நுழைய ஐ.தே.க தயாராக இருப்பதாக ரணில் மகிந்தவிடம் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் மகிந்த உடனடியாகப் பிடிகொடுக்கவில்லை. நாமலைச் சந்தித்து இது தொடர்பில் பேசும்படி ராஜபக்ச நழுவிக்கொண்டார். இந்தத் திட்டத்தை நாமலுக்குத் தெரிவித்து அவருக்கு ஆலோசனை கூறுவார் என்றும் மஹிந்த ரணிலிடம் உறுதியளித்தார்.

இப்படி ரணில் ஒரு வழியில் சென்றால் நாமல் மற்றொரு வழியில் செல்கிறார். அவர் தமது கட்சியிலிருந்து ரணிலின் ஆட்சிக் காலத்தில் வெளியேறிச் சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வருவதற்கு முழு மூச்சாகக் காரியமாற்றுகிறார். ரணில் அரசுத் தலைவராக் செயல்பட்டபோது, பெரமுனவின் மூத்த உறுப்பினர்கள் பலர் வெளியேறி ரணிலுடன் இணைந்தனர். ரணில் உருவாக்கிய சிலிண்டரின் பின்னால் சென்றனர். இருப்பினும் அவரால் அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்று எதிலும் வெற்றிபெற முடியவில்லை. அவரது எதிர்காலமே அவ்வளவுதான் என்கிற நிலையில்தான் ஊசலாடிக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் தமது கட்சியின் முன்னாள் உறுப்பினர்களைத் தம் பக்கம் மீண்டும் இழுத்துவிடலாம் என்று நாமல் நினைத்துப் பணியாற்றுகிறார்.

பெரமுன கட்சியைவிட்டு வெளியேறிய பல குழுக்கள் ஆங்காங்கே நாமலைச் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன. அவர்களில் முக்கியமானவர்கள் ரணிலுடன் நெருக்கமாகப் பணியாற்றிய காஞ்சனா விஜேசேகர, ஷெஹான் சேமசிங்க, ரோஹித அபேகுணவர்தன போன்றவர்கள்.

கடந்த வியாழக்கிழமை, ரோஹித அபேகுணவர்தன நாமலை தனது வீட்டில் நடைபெற்ற இரவு விருந்துக்கு அழைக்க நடவடிக்கை எடுத்திருந்தார். ஷெஹான் நாமலுடன் ஒரு சிறப்பு சுற்று பேச்சை நடத்தி முடித்துள்ளார்.

தனக்கு நெருக்கமான பெரமுனவின் மூத்த உறுப்பினர்கள் மீண்டும் இணைவது தனக்கு பெரும் ஆபத்து என்பதை ரணிலுக்குத் தெரியாததல்ல. அதனால், ஒரு வாரத்திற்கு முன்பு ஷெஹான் சேமசிங்கவை அழைத்து, ஐ.தே.கட்சிக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார். பெரமுனவை மீண்டும் இணைக்க வேண்டாம் என்றும், ஐ.தே.க உடன் இணைந்து அரசியல் செய்ய வேண்டும் என்றும் ரணில் ஷெஹானுக்குத் தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்பு ரணில்காஞ்சனாவை அழைத்தும் அதே ஆலோசனையை வழங்கியிருந்தார் என்று அறிய முடிந்தது. இருப்பினும், ஐ.தே.க உடன் அரசியல் செய்ய முடியாது என்றும், பெரமுன ஆதரவாளர்கள் மீண்டும் கிராம மட்டத்தில் நாமலுடன் இணைந்து செயல்படுவதால், மீண்டும் பெரமுனவுடன் அரசியல் செய்ய முடிவு செய்துள்ளதாகவும் ஷெஹான் ரணிலிடம் நேரில் கூறியுள்ளார். காஞ்சனாவும் ஒரு புத்திசாலித்தனமான முடிவை எடுத்துள்ளதாகவே அறிய முடிகிறது. ரணிலுடன் இனி அரசியல் செய்ய வேண்டாம் என்று காஞ்சனா முடிவு செய்துள்ளார்.

காஞ்சனா ஐக்கிய தேசியக் கட்சியில் எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என்றும் முடிவுசெய்துள்ளார். அதன்படி, காஞ்சனா புதிய கட்சியை உருவாக்கவோ அல்லது ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட கட்சியை வாங்கவோ முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், காஞ்சனா மீண்டும் பெரமுனவில் இணைந்து மாத்தறையில் இருந்து அரசியலில் நுழைவதற்கு பெரமுனவிற்குள் உள்ள ஒரு முக்கிய பிரமுகர் தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி பெரமுன மீள இணைந்து வருகின்றது என்பதை அறிந்த பின்னர்தான் அதனுடன் ஒரு 'டீலை' அமைத்துக்கொள்ள மகிந்தவைநாடியிருக்கிறார் ரணில். சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாணங்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டு கூட்ட அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது. இந்த முடிவில் இருக்கக்கூடிய பிழைகள் தவறுகள் தொடர்பாக அரசியல் கட்சிகளும் அரசியல் தலைமைகளும் அன்றே சுட்டிக்காட்டின.

இப்பொழுது நடைமுறையிலிருக்கின்ற மாகாணசபைஎன்பதும் அதற்குக்கிடைத்திருக்கின்ற அதிகாரங்கள் என்பதும் பலத்த போராட்டம் பலத்த இழப்புகளுக்குப்பின்பேகிடைத்தது. இதற்காகநாம் சிந்திய இரத்தம் ஏராளம். அதிகாரப் பகிர்விற்காகத் தமிழ் மக்கள் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழலில்கிடைத்தஅதிகாரத்தைமீளமத்தியஅரசிடம் ஒப்படைப்பது போன்ற ஒரு மோசமான செயல் இருக்கமுடியாது. தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் பல கிறித்தவ பாதிரியார்களும் தமது உயிரையே அர்ப்பணித்துள்ளார்கள். இன்றும்கூட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இனவழிப்பிற்கான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும். தமிழ் மக்கள் முழு அதிகாரங்களுடன் தமக்கான ஒரு சுயாட்சியை நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதில் கிறித்தவ மதகுருமார்களும் இந்து சமய மதகுருமார்களும் உறுதியாக இருக்கின்றனர்.

மன்னார் மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் தமிழ் மக்களுக்கான அதிகாரங்களைப் பெற்றெடுப்பது என்பதில் மிகக் காத்திரமான துணிச்சலான பங்களிப்பை வழங்கியிருந்தார். தனது இறுதி மூச்சுவரை அதற்காகவே பாடுபட்டார்.

மன்னார் வைத்தியசாலையில் பல குறைபாடுகள் இருக்கலாம். ஆளணி பற்றாக்குறை, மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள், மாவட்ட வைத்தியசாலை என்ற அடிப்படையில் அதன் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கலாம். கடந்த ஏழு ஆண்டுகளாக மாகாணசபை இல்லாத நிலையில், அந்த வைத்தியசாலையின் தேவைகளை மன்னார் மாவட்ட நிர்வாகிகளோ, ஆயரோ, அல்லது நலன் விரும்பிகளோ அரசுத் தலைவரிடமோ அரசிடமோ கேட்டுப்பெறுவதென்பது தவறானதல்ல. அதனை விடுத்து, வைத்தியசாலையையே மத்திய அரசிடம் ஒப்படைப்பதென்பது அதிகாரப் பகிர்வுக்காகப் போராடும் எமது அடிப்படையையே சிதைப்பதாகும். சிங்களதரப்பின் ஒருபகுதியினர் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படக்கூடாதென்பதில் இன்னும் உறுதியாக இருக்கின்றனர்.

விமல் வீரவன்ச, சரத்வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்களும் இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்களும்கூட அதிகாரப்பகிர்வை ஏற்றுக்கொள்ளாததரப்பினராகவே இருக்கின்றனர்.

சுகாதாரத் துறையின் அதிகாரப் பகிர்வில் போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல வைத்தியசாலைகளும் மாகாண அரசிற்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. வடக்கு மாகாணம் ஆட்சியில் இருந்தபொழுது மாகாண சுகாதாரத்துறைதொடர்பாகஒருநியதிச்சட்டத்தையும் உருவாக்கியிருந்தனர். அதன் பிரகாரம் மாகாணசபைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளை மத்திய ஆளும்தரப்பு பொறுப்பேற்பதாக இருந்தால் அது மாகாணசபையின் பெரும்பான்மையின் ஒப்புதலுடனேயே முடியும். அவ்வாறு இல்லாமல் செய்வதென்பது அரசமைப்பை மீறும் செயலாகும்.

ஆகவே நிலமைகள் இவ்வாறிருக்க, சில அதிகாரிகளும் மதத் தலைவர்களும் எமக்குக் கிடைத்த அதிகாரங்களை மீளவும் ஒப்படைக்க தீர்மானங்களை நிறைவேற்றுவதும் அதுதொடர்பான பேச்சுக்களை நடத்துவதும் மிகவும் தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகள் மட்டுமன்றி அதிகாரப் பகிர்வுக்கு எதிரான செயற்பாடுமாகும்.

அதிகாரிகளிடமும்; மதத் தலைவர்களிடமும் நாம் விணயமாக வேண்டுவதென்னவென்றால் மாகாண சபைகளுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, அவற்றை மீள ஒப்படைப்பது தொடர்பாக சிந்திப்பதோ, முயற்சிப்பதோ ஒரு தவறான அணுகுமுறையாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகளை அதிகாரிகள் சந்திக்கலாம். நிதி வளங்கள் குறைவாக இருக்கலாம். ஆளணிகள்குறைவாகஇருக்கலாம். வேறுபலகுறை பாடுகளும்ஏற்படலாம். இவற்றைஎவ்வாறுநிவர்த்தி செய்வதுஎன்பதைநிர்வாகிகள்சிந்திக்கவேண்டுமே தவிர, மாகாண வைத்தியசாலைகளை மீள ஒப்படைப்பதென்பது போராடிப்பெற்ற சில அதிகாரங்களைநாமேகைவிடுவதாகும். அதிகாரப் பகிர்வு என்னும் எமது பிரதான கோரிக்கையை சிறுமைப்படுத்துவதுமாகும் -என்றுள்ளார்.

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிவரும். எவ்வாறாயினும் இதனை இன்னுமொரு மத்தளை விமான நிலையம் போன்று அல்லாமல் வெற்றியளிக்கக்கூடிய விமான நிலையமாக மாற்றியமைக்கவே எதிர்பார்க்கின்றோம் என துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் 27/2 இன் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது நாளாந்தம் இரண்டு விமான சேவைகள் சென்னை மற்றும் திருச்சி விமான நிலையங்களில் இருந்து இடம்பெறுவதுடன், அந்தவிமானசேவைகளில் பயணிகள் ஆசன எண்ணிக்கை 70 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஜூலை வரையில் யாழுப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த விமானங்களின் எண்ணிக்கை தொடர்பில் கூறுவதாயின் 2020ஆம் ஆண்டில் 140 விமானங்கள், 2021 ம் ஆண்டில் 32 விமானங்கள், 2022ம் ஆண்டில் 383 விமானங்கள், 2023 ம் ஆண்டில் 864 விமானங்கள், 2024 ம் ஆண்டில் 1156 விமானங்கள் வந்து சென்றுள்ளதுடன், 2025 ஜூலை 31ஆம் ஆண்டு வரையில் 752 விமானங்கள் வருகை தந்துள்ளன.

அத்துடன் இந்த விமானங்களை பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை தொடர்பில்கூறுவதாயின் 2020ஆம் ஆண்டில் 3491 பயணிகளும் 2021ஆம் ஆண்டில் 110 பயணிகளும், 2022ஆம் ஆண்டில் 881 பயணிகளும், 2023ஆம் ஆண்டில் 29,717 பயணிகளும் 2024ஆம் ஆண்டில் 40,680 பயணிகளும், 2025ஆம் ஆண்டில் ஜூலை வரையில் 31,917 பயணிகளும் இந்த விமானங்களில் பயணித்துள்ளனர். இந்த சிறியளவிலான விமானங்களில் குறிப்பிட்டளவிலான பயணிகள் ஆசனங்கள் இருந்தாலும் குறிப்பிடத்தக்க வசதிகள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை 2021ஆம் ஆண்டில் இந்த விமான நிலையத்தினால் லாபம் இருக்கவில்லை. 41 மில்லியன் ரூபா நஷ்டம் இருந்தது. 2022இல் 5 மில்லியன் வருமானம் கிடைத்தாலும் 82 மில்லியன் ரூபா செயற்பாட்டு நஷ்டமாக இருந்தது. 2023ஆம் ஆண்டில் 152 மில்லியன் ரூபா இலாபம் இருந்தது. 2024இல் 286 மில்லியன் ரூபா வருமானமும், செயற்பாட்டு லாபமாக 76 மில்லியன் ரூபாவும் இருந்தது. அத்துடன் 2025 ஜூலை வரையில் 197 மில்லியன் ரூபா வருமானமும் செயற்பாட்டு லாபமாக 67 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளது.

இந்த விமான நிலையத்தில் இலங்கை விமான சேவைகள், விமான நிலையங்கள் நிறுவனத்தை சேர்ந்த 76 பேரும், சுங்கம், வெளிநாட்டு சேவைகள், சுற்றுலாத்துறை, பொலிஸ் உள்ளிட்ட வேறு நிறுவனங்களை சேர்ந்த 182 பேரும் பணியாற்றுகின்றனர். இதேவேளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் பெரியளவிலான விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமாயின் பெரியளவிலான விமான ஓடுபாதை, விமான நுழைவு பகுதி, விமானங்களை நிறுத்தி வைக்கும் பகுதி மற்றும் பயணிகள் பகுதி உள்ளிட்ட நிர்மாணங்களுக்காக வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலதிக காணிகளையும் கையகப்படுத்த வேண்டிவரும். இங்கு ஆய்வுகளை நடத்தி அது தொடர்பான அறிக்கைகளை பெற்றே அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். அங்கே தற்போது பயணிகளை வரவேற்க, வழியனுப்ப செல்லும் உறவினர்களுக்காக அங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு தற்காலிக டென்ட் ஒன்று அமைக்கப்பட்டிருந்தாலும் நிரந்த நிர்மானமொன்றை வரும் மாதங்களில் செய்வோம். நிச்சயமாக சர்வதேச விமான நிலையமாக யாழ். விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களிடம் உள்ளது. அதனை வணிகதிட்டங்களுடனேயேசெய்யவேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இந்த விடயத்தில் இந்திய அரசுக்கு நன்றி கூற வேண்டும். கட்டம் கட்டமாக பெரிய விமான நிலையமாக மாற்ற வேண்டும். மத்தள விமான நிலையம் பெரிய விமானங்களை தரையிறக்ககூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. அதனை போன்று யாழ். விமான நிலையத்தையும் அமைக்க வேண்டும். ஆனால் முறையான வணிக திட்டமிடல்கள் இன்றி அதனை செய்தால் அது தோல்வியடையும். இதனால் கட்டம் கட்டமாக நாங்கள் அதனை அபிவிருத்தி செய்வோம். நல்ல நிலைக்கு தற்போது விமான நிலையம் செல்கின்றது.

இந்நிலையில் யாழ். விமான நிலையத்தை விரிவாக்குவது தொடர்பில் காணிகளை கையகப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகின்றது. ஆனால் தற்போதுள்ள விரிவாக்கத்திற்கு புதிதாக காணிகள் அவசியமில்லை என்றாலும், இதனை மேலும் விரிவு செய்ய வேண்டுமாயின் காணிகள் பெற்றுக்கொள்ள வேண்டிவரும். எவ்வாறாயினும் இதனை இன்னுமொரு மத்தளை விமான நிலையம் போன்று அல்லாமல் வெற்றியளிக்கக்கூடிய விமான நிலையமாக மாற்றியமைக்கவே எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகவுள்ளது. இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் 1700 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடப்பதாக ஆளும்தரப்பு தொடர்ச்சியாககூறிவருகின்றது. உண்மையில் இதுதொடர்பில்பேச்சுவார்த்தைநடக்கின்றதா? அந்தசம்பளஅதிகரிப்புஎப்போதுசெய்யப்படும் என்று கூறினால் அதற்கு தேவையான உதவிகளை எங்களால் வழங்க முடியும். புதிய முறைமைக்கு போக வேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறு போக

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் பொறுப்பற்ற போக்கு

இலங்கை உள்நாட்டுப்போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், அந்தப் போரின் நேரடி விளைவுகளால் இன்னும் பத்தாயிரக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளில் அகதிகளாகத் தங்கிவருகின்றனர். இந்தியாவின் தமிழ்நாடு உட்பட பல்வேறு நாடுகளில் தங்கியிருக்கும் இவர்கள், தமது சுயவிருப்பத்தின் பேரில் நாடு திரும்புவதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UNHCR) ஆதரவுடன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால், அந்த நடவடிக்கையை தற்போது அகதிகளுக்கான ஐநா தூதரகம் இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது. இது மிகுந்த கவலையூட்டும் முன்னேற்றம். ஏனெனில், ஒருவரின் தாய்நாடு திரும்பும் உரிமை மறுக்கப்படாத ஒன்றாகும். அதற்கு ஆதரவாக உதவி செய்வது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகவும் கருதப்படுகிறது. இப்போது அது இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை, அகதிகள் பாதுகாப்பு மற்றும் அடிப்படை மனித உரிமைகள் குறித்து இலங்கை அரசு வெளிப்படுத்தியுள்ள தோல்வியைக் காட்டுகிறது.

அகதிகளுக்கான ஐநா தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அகதிகள் நாடு திரும்பும்போது அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்கள் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. திரும்பியவர்கள் தங்கும் இட வசதிகள் இல்லாமை, வாழ்க்கையை நடத்துவதற்கு ஆதரவு குறைவு, வேலை வாய்ப்புகள் இல்லாமை, கல்வி மற்றும் சுகாதார வசதிகளில் தடைகள், முக்கியமாக பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான உறுதிப்பாடுகள் இல்லாமை ஆகியவை இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில் மேலும் அகதிகளை நாடு திருப்புவது அவர்களை இன்னும் மோசமான நிலைக்கு தள்ளிவிடும் என UNHCR கண்டறிந்துள்ளது.

இதுவே காரணமாக, இடைநிறுத்தம் என்ற அவசரமான முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை நேற்று இலங்கை நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், அகதிகள் இன்னும் நாடு திரும்புவதற்கு தயங்குவதற்கான முக்கியக் காரணம் இலங்கையில் அவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு இல்லாததே என சுட்டிக்காட்டினர். போரின் பிந்தைய மறுசீரமைப்பு சரியாக நடைபெறவில்லை என்பதும், அகதிகளுக்குத் தேவையான நில வசதிகள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள் அரசு முறையாக வகுக்காததே முக்கிய தடையாகக் கூறப்பட்டது.

இதற்கு அமைச்சரவையில் அகதிகள் தொடர்பான பொறுப்பு வகிக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதிலளித்தார். அவர், 'இலங்கை அரசு இதனை முன்னெடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், UNHCR பக்கம் தற்போது நிதி மற்றும் வளங்கள் குறைவாக இருப்பதே காரணம்' என்று தெரிவித்தார். மேலும், அகதிகள் நாடு திரும்புவதற்கு அரசு இன்னும் உறுதியாக இருக்கிறது என்றும், அவர்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும் என்றும் உறுதி அளித்தார்.

ஆனால், இப்பதில் வெறும் அரசியல் தப்பித்தலை மட்டுமே பிரதிபலிக்கிறது. அகதிகள் நாடு திரும்பாமையின் உண்மையான காரணங்கள் வளக் குறைவோ, நிதி சிக்கலோ அல்ல. மாறாக, அது அரசின் அரசியல் மனப்பான்மையிலும், பொறுப்பற்ற திட்டமிடலிலும், முக்கியமாக தமிழர்களின் பாதுகாப்பு மீதான அக்கறை இல்லாமையிலும் தான் உள்ளது.

இலங்கை அரசு அகதிகள் பிரச்சினையை எப்போதுமே 'ஒரு வெளிநாட்டு சிக்கல்' எனக் கருதி பின்தள்ளிவைத்துள்ளது. ஆனால், அகதிகள் இலங்கையின் குடிமக்களே. அவர்கள் தங்கள் தாய்நாட்டில் வாழ முடியாமல் வெளியே தங்கி இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது அரசின் பொறுப்பின்மையையே காட்டுகிறது.

சர்வதேச அளவில் அகதிகளுக்கான ஐநா தூதரகத்தைக் குற்றம் சாட்டி தப்பித்துக் கொள்வது எளிது. ஆனால், நிஜமான பிரச்சினை என்னவென்றால், அகதிகள் நாடு திரும்பும் சூழ்நிலைகளை பாதுகாப்பானதாகவும், மனிதாபிமானமாகவும் மாற்ற அரசு எந்த நேர்மையான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நில மீட்பு, வீடு கட்டும் திட்டங்கள், கல்வி வசதிகள், சுகாதார சேவைகள், வேலை வாய்ப்புகள் என எதிலும் அரசு முன்னேற்றம் காட்டவில்லை. இதனால்தான் அகதிகளுக்கான ஐநா தூதரகம் இடைநிறுத்தம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அகதிகள் நாடு திரும்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் வற்புறுத்தப்பட வேண்டியதில்லை. மாறாக, அவர்கள் தன்னார்வத்துடன் திரும்பும் சூழலை உருவாக்கிக் கொடுப்பதே அரசின் பொறுப்பு. அவர்கள் தமது தாய்நாட்டில் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும் வாழ முடியும் என நம்பிக்கை பெற்றால் தானாகவே திரும்புவார்கள்.

ஆனால், அந்த நம்பிக்கை தற்போது இல்லை. அதை உருவாக்காமல் வெறும் அரசியல் பேச்சுகள் பேசிக்கொண்டிருப்பது, அகதிகள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் எடுத்துள்ள இடைநிறுத்த முடிவு, இலங்கை அரசின் தோல்விக்கு நேரடியான வெளிப்பாடு. நாட்டின் குடிமக்கள் இன்னும் வெளிநாடுகளில் அகதிகளாக தங்கியிருப்பது எந்த அரசுக்கும் வெட்கக்கேடாகும். மாறாக, அகதிகள் நாடு திரும்ப விரும்பும்போது அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பும், வாழ்வாதாரமும் வழங்கத் தவறுவது அரசின் மனிதாபிமான குறைபாடாகும்.

நாடாளுமன்றத்தில் எழுந்துள்ள விமர்சனங்களை அரசு உண்மையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அமைச்சர் பிமல் ரத்நாயக்கா கூறிய 'வளக் குறைவு' என்ற காரணம் உண்மையல்ல. உண்மையான காரணம் அரசின் அரசியல் மனப்பான்மை தான்.

அதனால், இப்போதாவது இலங்கை அரசு பொறுப்புடன் செயல்பட்டு, அகதிகள் திரும்புவதற்கான உண்மையான சூழலை உருவாக்க வேண்டும். இல்லையெனில், அகதிகள் பிரச்சினை இன்னும் பல தசாப்தங்களும் தொடர்ந்தே தீரும். அது இலங்கையின் சர்வதேசப் புகழுக்கும் பேரழிவாகும்.

# அகதிகளைத் திருப்பி அழைத்து வரும் செயற்பாட்டை இடைநிறுத்தியது ஐ.நா.

போரால் இடம்பெயர்ந்த பின்னர், சுய விருப்பின் பேரில் நாடு திரும்ப விரும்பும் அகதிகளை இலங்கைக்குக் கூட்டி வந்து இங்கு மீளக் குடியேற்றும் தனது செயன்முறையை இலங்கை அரசுத் தரப்பின் முறையற்ற கெடுபிடிப் போக்குக் காரணமாக நிறுத்தி வைத்துள்ளது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் (ஷீஹிக்ஷிளீயூ) மீளழைத்து வரப்படும் தமிழ் அகதிகள் இலங்கைக்கு வந்த வுடன் கைது செய்யப்படலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலைமை காணப்படுவதால் இலங்கைத் தமிழ் அகதிகளை நாட்டுக்குக் கூட்டிவரும் செயன்முறையை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வந்தவுடன் குடிவரவுச் சட்டங்களைமீறிய குற்றச்சாட்டில்குறைந்தது நான்கு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என வந்த தக வல்கள் காரணமாக, ஓகஸ்ட் 14, 2025 அன்று திருச்சியிலிருந்து கொழும்புக்கு ஏழு அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டம் கடைசிநிமிடத்தில் இரத்துச்செய்யப்பட்டது. அதிகாரபூர்வ வட்டாரங்களின்படி, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தால் திருப்பி அனுப்பப்பட்ட ஃப்ரீமேன் ரிச்சர்ட் வேலசுந்தரம் (வயது54), ஓகஸ்ட் 12, 2025 அன்று கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் ஒரு நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும், திருப்பி அனுப்பும் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அவர் திரும்பி வருவது தொடர்பான எந்த முன் பாதுகாப்பு கவலைகளும் இல்லை என்று வட்டாரங்கள் தெரிவித்தன. இதேபோல், மே 28, 2025 அன்று, உள்நாட்டுப் போரின் போது பல தசாப் தங்களுக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறிய மற்றொரு தமிழ் அகதி யாழ்ப்பாணத்தில் தரையிறங்கிய பிறகு கைது செய்யப்பட்டார்.

ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதுரகத் தின் உதவியின்றி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய தமிழ்த் தம்பதியினரும் கைது செய்யப்பட்டனர். இந்த ஜோடி 1996 முதல் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்தனர் என்று கூறப்படுகின்றது. வந்தவுடன், அவர்கள் குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளைச் செல்லுபடியாகும் பாஸ் போர்ட் அல்லது பயண ஆவணங்கள் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை அதிகாரிகள் கைது செய்வது இதுவே முதல்முறை.

'தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதே அடிப்படைக் கொள்கை. ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லாவிட்டால் கைதுகள் செய்யப்படாது. இன மோதலில் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறியமையால் குடியேற்றச் சட்டங்களை மீறுவது மன்னிக்கப்படுகின்றது' என்று திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபடும் ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறினார்.

அகதிகள் குடியேற்ற விதிகளை மீறியமைக்காகக் கைது செய்யப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவார்கள் என்றும், இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை, நாடு திரும்பும் செயல்முறை நிறுத்தி வைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகளை அழித்த சூத்திரதாரியை வெளிப்படுத்துவோம்

## அமைச்சர் விஜேமுனி தெரிவிப்பு

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் கணினிகளில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்டதால் பெரும் மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அன்று காணப்பட்டது. இந்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யார் என்பது நீதிமன்ற விசாரணைகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் என சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹன்ஷக விஜேமுனி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் கணினிகளில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்ட சம்பவம் 2021.07.09 ஆம் திகதியன்று அறிக்கையிடப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் எபிக் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான தரிந்து தர்ஷன என்பவர் 2021.08.09 ஆம் திகதியன்றும், அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர் பிரிவின் உதவிப் பொறியியலாளரான திலுப் ராமநாயக்க என்பவர் 2021.09.29 ஆம் திகதியன்றும் கைது செய்யப்பட்டனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை 2021.07.28 ஆம் திகதியன்று குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய குற்றப்புலனாய்வு பிரிவின் டிஜிட்டல் தடயவியல் பிரிவு கொழும்பு நீதிவான் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுக்கு சாட்சிமளித்த இரண்டாம் சந்தேகநபரான திலுப் ராமநாயக்க என்பவர் தமது செயற்பாடுகளினால் கணினி கட்டமைப்பில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்டதாக எழுத்துமூலமாக ஒப்புதலளித்துள்ளார். இதுவும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தரவுகள் அழிக்கப்பட்டதால் பெரும் மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அன்று காணப்பட்டது. இந்தச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யார் என்பது நீதிமன்ற விசாரணைகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் என்றார்.

# நல்லைநகர் நாயகனே தேரேறி வா !

ஈராறு முகமுடையாய் தேரேறி வா
எல்லோரின் இடரகலத் தேரேறி வா
தொல்லைதரு துட்டர்தமை துடைத்தெறிய வா
நல்லைநகர் நாயகனே தேரேறி வா

நல்லூரரான் தேரிழுக்க நாடெல்லாம் வந்திருக்க
எல்லையில்லா மகிழ்வுடனே எல்லோரும் வடம்பிடிப்பார்
அல்லலினை அகற்றுவென அடியார்கள் வேண்டிடுவார்
நல்லைநகர் வேல்முருகா நல்லருளைத் தந்திடையா !

தேரென்று சொன்னாலே ஊர்முழுக்கக் கூடிநிற்கும்
யார்யாரே வருவார்கள் தேரிழுத்துத் தரிசிப்பார்
ஊர்முழுக்க ஆவலுடன் ஒன்றுகூடி வந்துள்ளார்
வேலவனே தேரேறி வெளிச்சமதைக் காட்டிடுவாய் !

காவடிகள் வீதியெலாம் கணக்கின்றி வந்துவிடும்
காளையரும் கன்னியரும் களிப்புடனே குவிந்திடுவார்
குழந்தைகளின் குதூகலத்தால் கோவில்வீதி களைகட்டும்
குமரனே தேரேறி குறைபோக்க வந்திடுவாய் !





வாய்கட்டு கைகட்டு வயிற்றையும் கட்டென்றார்
வாழ்வெல்லாம் சுகமாக வாழ்ந்திடலாம் எனவுரைத்தார்
பத்தியமாய் நாமிருந்தோம் பக்குவமாய் நாமிருந்தோம்
பரமனது திருக்குமரா உன்தேரைப் பார்த்திடவே !

தேரேறி வருங்குமரா திருவருளைத் தந்திடுவாய்
ஊரெல்லாம் உனையணுகி உவந்தேற்ற விரும்புகிறார்
பேரக்கர் பெருந்துயரை வேரோடு அழிந்தவனே
பேதலிக்கும் அடியவரைப் பேணிடுவாய் முருகையா !



நல்லூரான் தேர்காண நாளெண்ணிப் நாமிருந்தோம்
நல்லூரில் பண்ணிசைக்க பலபேர்கள் காத்திருந்தார்
அத்தனையும் நிறைவேறும் காலமதைத் தந்துவிட்டாய்
அருட்குமா தேரேறி அருள்பொழிய வந்திடையா !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**





## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றால் கூறுங்கள். நாங்கள் எல்லோரும் பேச்சுவார்த்தைகளை நடத்தி அதற்கு சென்றாவது அதிகரிக்கலாம் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சமந்த வித்யாரத்ன, சபைக்கு வருவதற்கு முன்னர் நானும்தொழில்அமைச்சர்அணில்ஜயந்தவும் அமைச்சுகளின்அதிகாரிகளைஅழைத்துவந்து இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையடினோம். குறிப்பாக அரசுத் தலைவர் தனது வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து அரசஊழியர்களின்சம்பளத்தை அதிகரித்தார். தனியார் துறையின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் 1700 ரூபா வரையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தோம்.

இதன்படி ஆளும்தரப்பு பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இதன்போது அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளையும் எங்களிடம் கூறினர். இது கடினமானது என்ற வகையிலேயே கூறினர். வேறு சில பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடிய போது அவர்களுக்கு சம்பள அதிகரிப்பை செய்ய முடியுமாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். இந்த விடயத்தில் கூட்டாகவே தீர்மானம் எடுக்க வேண்டும். இது தொடர்பில் கூட்டு உடன்படிக்கைக்கு செல்ல வேண்டும்.

எவ்வாறாயினும் நாங்கள் வழங்கிய வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்ற தேவையான விடயங்களை மறுசீரமைத்து வருகின்றோம். இதனை கைவிட மாட்டோம். நிச்சயமாக இதனை நிறைவேற்றுவோம். நீங்கள் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குங்கள். இந்த சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்என்பதேஎங்களின்நோக்கமாகும். ஏதேனும் தொழிற்துறையை பாதுகாக்க வேண்டும். அப்போதே தொழிலாளர்களும் பாதுகாக்கப்படுவர். இதன்படி எல்லாம் பாதுகாக்கப்படக்கூடிய முறைமையொன்றை தேடுகின்றோம். பேச்சுக்கள் நடக்கின்றன. புதிய முறைமைகளை தேடுவோம். அதற்காக ஒத்துழைப்புகளை வழங்குங்கள் என்றார்.

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/ 2இன் கீழ் போக்குவரத்து,நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரிடம் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இரண்டாம் உலகப்போரின்போது பிரித்தானியவான்படையின்பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட இலங்கையின்இரண்டாவது பன்னாட்டுவிமானநிலையமானயாழ்ப்பாணம் பலாலிசர்வதேசவிமானநிலையம்வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க வடக்கு - கிழக்கின் அடையாளமாகபார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையம் ஊடாகவே எயார்சிலோன் நிறுவனத்தின் முதலாவது விமானப் பயணம் இரத்மலானையிலிருந்து சென்னைக்கு நடத்தப்பட்டது. அதன்பின்னர் பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னை, திருச்சி, மதுரை ஆகிய தென்னிந்திய நகரங்களுக்கும் கொழும்புக்கும் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டு பின்னரான போர்க்காலச் சூழலில் பயணிகள் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியில் முதற்கட்ட அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு தற்போது இவ்விமான நிலையம் மீளியக்கப்பட்டு வருகின்றபோதும், தற்போதுபயன்பாட்டிலுள்ள விமான ஓடுபாதையை மேலும் ஒரு கிலோ மீற்றர்நீளத்திற்குவிரிவாக்கும்பட்சத்தில்,ஏ-320 ரக விமானம் உள்ளிட்ட ஆகக்குறைந்தது 180 பயணிகளை ஏற்றக் கூடிய விமானங்கள் பலாலி விமான நிலையத்துக்கு நேரடியாக வந்து தரையிறங்கும் நிலையை உருவாக்கி, அதன்மூலம், புலம்பெயர்ந்தோரும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த விமானநிலையம் ஊடாக வருகை தருவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க முடியும்.

குறிப்பாக, பெரிய ரக விமானங்கள் செயற்படத் தொடங்கினால் பயணிகள் கொண்டுவரக் கூடிய பொதிகளின் அளவு 15 கிலோவில் இருந்து 30 கிலோவாக அதிகரிக்கப்படும். இதனால்வடக்கு-கிழக்கிற்கு வருகைதரும்வெளிநாட்டவர்களின்தெரிவாக பலாலி விமானநிலையமே முன்னுரிமை பெறும். இதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்வளர்ச்சியடைவதுடன்நாட்டின் வருமானமும்அதிகரிக்கப்படும். அதேவேளை, வடக்கு கிழக்கிலுள்ள வரலாற்றுத் தொன்மை மிகுஆலயங்களைதரிசிக்கபெருமளவுஇந்திய சுற்றுலா பயணிகள் வருகை தருவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும்.

இவ்வாறான பின்னணியில் பலாலி சர்வதேசவிமானநிலையத்தின்இரண்டாம்கட்ட அபிவிருத்தி காலம் தாழ்த்தப்படுவதற்கான காரணம் என்ன? மேற்குறித்த அடிப்படையில் விமான நிலையத்தின் சேவைப்பரப்பை விரிவாக்குவதன் மூலம் புலம்பெயர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான திட்டங்கள் எவையேனும் அரசிடம் உள்ளதா? அமைச்சர் கடந்த 2025.03.30ஆம் திகதி தாங்கள் யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமானநிலையத்திற்கு வருகைதந்த போதுஇ ஆறுமாத காலத்திற்குள் இவ்விமானநிலையத்தின் புனரமைப்புப் பணிகள் முழுமைப்படுத்தப்படும் என உறுதியளித்து ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளபோதும், அதுசார்ந்த எந்தவொரு முன்னேற்றகரமான செயற்பாடுகளும் இதுவரை ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அறித்தர முடியுமா?

வடக்கு-கிழக்கு அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கும் இந்திய நாட்டின் உதவியுடனேயே இந்த விமான நிலையத்தின் முதற்கட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி எவ்வளவு என்பதையும், இரண்டாம்கட்ட அபிவிருத்திக்கு தேவைப்படும் நிதிப்பெறுமதி எவ்வளவு என்பதையும், இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கான நிதியை இந்தியாவிடம் பெற்றுக்கொள்வதில் ஆளும்தரப்பிற்கு என்ன தடை உள்ளது என்பதையும் அமைச்சர் தெரிவிப்பாரா?, அவ்வாறு எந்தத் தடைகளும் இல்லையெனில்பலாலிவிமானநிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிவுறுத்தப்படும் என்பதை அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

பலாலி விமான நிலையத்தின் விரிவாக்கத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின்உரிமையாளர்களுக்குஇழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கலாமா? ஆமெனில், இதுவரை எத்தனைபேருக்குஎவ்வளவுதொகைஇழப்பீடு வழங்கப்பட்டுள்ளதுஎன்பதையும்இன்றுவரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாதவர்கள் எத்தனை பேர், அவர்களுக்கான இழப்பீடு வழங்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? என்றார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி மற்றும் சொத்து தொடர்பான விபரங்கள் கணக்காய்வு செய்யப்படவில்லை. அரசியலமைப்பின் 154 ஆவது ஏற்பாடு மற்றும் 2018 ஆம் ஆண்டின்19ஆம்இலக்கதேசியகணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கிகளின் நிதி விவகாரங்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திவங்கிகள்முறையாககணக்காய்வு செய்யப்படாத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டன.இதுவரையான காலப்பகுதியில் உள்ளக கணக்காய்வுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன.உள்ளககணக்காய்வுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாடு காணப்படுகிறது. ஆகவே நிதி ஒழுக்கத்தை பேணுவதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமூக கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத்திறனாக்குவதற்காகவேசமுர்த்திதிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.சிறந்த தெரிவுகளின் அடிப்படையில் தான் தற்போது சமுர்த்தி நலன்புரிதிட்டம் வழங்கப்படுகிறது. மலையக பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள்.அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்

## தாயகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக மக்கள் தமது உயிரை காப்பாற்றுவதற்காக தமது பூர்வீக இடங்களில் இருந்து வெளியேறி உலகின் பல நாடுகளிற்கும் புலம்பெயர்ந்தனர். அவ்வாறேபெருமளவிலானோர்இந்தியாவிற்கு 1983 இனக்கலவரத்தின்போதும் அதன் பின்னராக குறிப்பாக 90களிலும் சென்று இலங்கை ஏதிலிகளிற்கான முகாம்களில் தங்கியிருந்தனர். இலங்கையில் யுத்தம் முடிவிற்கு வரமுன்னரும் வந்த பின்னரும் அவர்கள் தங்கள் சுயவிருப்பின்பேரில் தங்களது சொந்த நாட்டிற்கு திரும்ப விருப்பம் கொண்டிருந்தனர். அந்தவகையில் சுயவிருப்பின் அடிப்படையில் இலங்கை வந்தவர்கள் பல இன்னல்களிற்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

குறிப்பாக அவர்களது காணிகள் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத நிலையில் போர் முடிவடைந்தபின்னர் பல்வேறு அரச திணைக்களங்களால்ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் தங்கியிருந்தனர். அத்துடன் அவர்களின் வாழ்வாதாரம்கேள்விக்குறியானது. இலங்கை திரும்பும்போதுஅகதிகளிற்கானஐக்கியநாடுகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் நிவாரண நிதி மற்றும் அவர்களது சொந்த செலவில் சிலகாலங்கள் தங்கியிருந்து வாழ்க்கையை கொண்டுநடாத்த முடியாத நிலையில் மீண்டும் அகதியாக இந்தியா சென்ற வரலாறு உள்ளது. ஆனால் தற்போது இப்பிரச்சனைகளிற்கு மேலாக புதியதோர் பிரச்சனை இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது அகதிகளிற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தின் அனுசரனையுடன் சுயவிருப் பின்பேரில்நாடுதிரும்பும்ஏதிலிகள் இலங்கைக் குள் வந்ததும் கைது செய்யப்படுகிறார்கள். இது சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும்.

அண்மையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலும் கடந்த 12.08.2025 அன்று கட்டுநாயக்க விமான நிலையத்திலும் இவ்வாறான கைதுகள் இடம்பெற்றுள்ளன. இவர்கள் இலங்கை வரும்போது சம்பந்தப்பட்டவர்களின் குற்றவியல்வரலாறுப்பின்னணிஆராயப்பட்டே இலங்கைக்கு மீளத்திரும்புவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். அவ்வாறிருக் கும்போது இவர்கள் கைது செய்யப்படுவதன் நோக்கம் என்ன? மேற்குறிப்பிட்டவர்கள் இந்திய அரசால் முகாம்களில் பராமரிக்கப்பட்டு, இலங்கை அரசால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் அனுசரனையுடன் நாட்டிற்குள் வருபவர்கள். ஆகவே சட்டநடைமுறைகளை பின்பற்றி தாயகம் திரும்புபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அவர்களது கண்ணியத்தை பாதுகாப்பதும் அரசின் கடமையாகும்.

அண்மைக்கால கைதுகளால் சுயவிருப்பின்பேரில் ஏதிலிகளை சொந்த நாட்டிற்கு கொண்டுவருகின்ற தமது செயற்பாட்டை ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக நேற்றுஅறிவித்துள்ளது. இவ்விடயம்தொடர்பாக அரசுத்தலைவர் அவர்களிடம் நான் நேரடியாக பேசியபோது விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்குஅறிவுறுத்தல்வழங்குவதாகவும் அவருடன் பேசும்படியும் கூறினார். எனவே சுயவிருப்பில் இலங்கை வரும் ஏதிலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அவர்களை கண்ணியத்துடன் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என இவ் உயரிய சபையை கேட்டுக்கொள்கிறேன். கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் விரைவில் அவர்களை இவ்வழக்குகளில் இருந்து விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் வடக்கு மாகாண மீள்குடியேற்றத்திற்கான அமைச்சராக குறுகிய காலம் பணியாற்றியபோது'வடக்குமாகாணத்திற்கான மீள்குடியேற்றக்கொள்கை' ஒன்றை தயாரித்து மத்திய மீள்குடியேற்ற அமைச்சிற்கு அனுப்பியிருந்தோம். அதனடிப்படையில் மத்திய அமைச்சினாலும்; இவ்வாறான கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. ஆனால் இவ்வேலைத்திட்டம் சில காரணிகளினால் முற்றுப்பெறவில்லை. எனவே காணி, வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்புபோன்றமுக்கியவிடயங்களை உள்ளடக்கியநாட்டிற்கானபுதியமீள்குடியேற்ற கொள்கை ஒன்றை தயாரிப்பதனூடாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களையும் வெளிநாடுகளிற்கு ஏதிலிகளாக சென்று சுயவிருப்பின்பேரில் நாடு திரும்புபவர்களையும் அவர்களது பூர்வீக இடங்களில் மீளக்குடியேற்ற ஏற்பாடுகளை செய்யவேண்டும் என இவ் உயரிய சபையை கோருகிறேன். இச்செயற்பாடு நிரந்தர சமாதானத்திற்கும் எமது நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும்வழிவகுக்கும்என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரால் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற ராமசாமி தேவராஜா, தேவராஜா புஸ்பராணி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் சபையில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டன. போர்க்தான் இவர்கள் அகதிகளாக நாட்டை விட்டுச் சென்றுள்ளாளர்கள். யுத்த சூழலின் போது எவரும்சட்டரீதியாகஅகதிகளாகசெல்வதில்லை. உலக நாடுகளிலும் அவ்வாறான தன்மையே காணப்படும்.தமது உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் எவ்வழியிலாவது நாட்டை விட்டுச் செல்வார்கள்.

இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகாலமாக அகதிகளாக வாழும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இன்றளவில் தீர்க்கப்படவில்லை.110000 இலங்கையர்கள் இந்தியாவில் அகதிகளாக இருந்ததாக குறிப்பிடப்பட்டது. இதில் 28500 பேர் இலங்கை குடியுரிமையும், இந்திய குடியுரிமையும் இல்லாதநிலையில்இருந்தார்கள். இவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பங்குப்பற்றலுடன் நாடாளுமன்றத்துக்கு பிரேரணையொன்றை கொண்டு வந்தோம். ஒரு உறுப்பினரை தவிர ஏனைய சகல உறுப்பினர்களும் அந்த பிரேரணைக்கு ஆதரவளித்தார்கள். இதன் பின்னரே அந்த 28500 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது.

போர் முடிவடைந்ததன் பின்னர் சுமார் 6000 பேர் வரையிலானோர் இலங்கைக்கு வந்து மீள்குடியேறியுள்ளார்கள். இந்தியாவில்அகதிகளாகஇருந்துஇலங்கைக்கு திரும்பியவர்களை மீள்குடியமர்த்த தனிப்பட்ட முறையில்தலையீடுசெய்துள்ளேன். கனகபுரம், பாரதிபுரம் ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று மீள்குடியேற்றபணிகளை ஆராய்ந்துள்ளேன்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் அகதிகளை கைது செய்வதாக தற்போது குறிப்பிடப்படுகிறது. சின்னையா சிவலோகநாதன் என்பவர் நாடு திரும்பிய போது அவர் யாழ்.பலாலிவிமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்விடயத்தில் நான் தலையீடு செய்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களுடன் சிவலோகநாதன் என்பவர் கைது செய்யப்பட்டு இரண்டுநாட்களுக்கபின்னர்விடுவிக்கப்பட்டார்.

இலங்கைக்கு வரும் அகதிகளை கைது செய்வது ஆளும்தரப்பின் கொள்கையல்ல,அவ்வாறு கைது செய்வது தவறு .நாங்கள் நாட்டை நிர்வகிக்கிறோமே தவிர குடும்பத்தை நிர்வகிக்கவில்லை. அரச அதிகாரிகளில் ஒருசிலர் செய்யும் தவறுகளை ஆளும்தரப்பின் தவறு என்று குறிப்பிடுவது முறையற்றது.

ஏதாவது ஒரு விடயத்தை பிடித்துக் கொண்டு ஆளும்தரப்பின் மீது சேறுபூசுவதை ஒரு தரப்பினர் தற்போது பிரதான செயற்பாடாக கொண்டுள்ளார்கள்.வடக்கிலும் தெற்கிலும் இனவாதிகள் தற்போது அநாதையாகியுள்ளார்கள். தமிழ் அகதிகளை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு வேண்டுமென்றே நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கிறது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த ஒருசிலர் பல்வேறு வகையில்செயற்படுகிறார்கள். ராஜபக்சர்களின் அவதாரமாகவே இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் இனவாதத்துடன் செயற்படுகிறார்கள்.

இந்தியாவில் அகதிகளாக இருந்த ராமசாமி தேவராஜா, தேவராஜா புஷ்பராணி ஆகிய இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.. இலங்கையில் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம் உள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் 45(1)பி

தொடர்ச்சி 7ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## நாமல் ராஜபக்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயத்தின் 34 ஆவது பிரிவின் பொது காரணிகளுக்கு அமைவாகவே இக்கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டுக்கு வரும் அகதிகள் இவ்வாறு கைது செய்யப்படுவது கவலைக்குரியது.இருப்பினும் அதற்கு ஏதேனும் சட்ட காரணிகள் இருக்கும் இந்த சட்ட விடயங்களை திருத்துவதற்கான இயலுமை காணப்படுகிறது. தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் கடந்த காலங்களில் சட்ட திருத்தத்துக்கான எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் அன்புடன் பொறுப் பேற்போம். முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்குவோம். இந்த இரண்டு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அகதிகள் முகாம் ஏன் இடைநிறுத்தியது என்பதை அறியவில்லை.கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணையளிக்கப்பட்டுள்ளது.இச்சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அகதிகள் முகாமுடன் அமைச்சு மட்டத்தில் பேசுவோம்.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி அவர்களை இலங்கை பிரஜைகளாக்க உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.சட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் நீதியமைச்சுடன் கலந்துரையாடி இவ்வாறான கைதுகளை நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.அதிகாரிகள் இழைக்கும் தவறை இனவாதம் என்று குறிப்பிட வேண்டாம்.தமிழர்கள் என்பதால் இவர்கள் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள் என்று முதலமைச்சர் பதவி கனவுடன் இருப்பவர்கள் குறிப்பிடலாம்,ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறு குறிப்பிடுவது அழகல்ல, குறைப்பாடுகளை சுட்டிக்காட்டுங்கள் அதனை விடுத்து இனவாத செயற்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்காதீர்கள் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை பகிரங்கமாகவே கூறுகின்றேன். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளோடு இறுதியில் இந்தியா எமக்கு பருப்பு வழங்கியது. பருப்பினை வழங்கி ஜே.ஆர்.ஜெயவர்தன தரப்பினரை அச்சுறுத்தி இந்து - லங்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் செய்தது.

இந்து-லங்கா ஒப்பந்தத்தின் பின்னர் என்ன ஆனது? அதனை நடைமுறைப்படுத்துவதற்காக 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாகாணசபை சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக மாகாணசபைகள் செயற்பாட்டில் இல்லை. 2500க்கும் மேற்பட்ட அதிகாரிகள் வேலையின்றி காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு வேலையின்றி காலத்தைப் போக்கிக்கொண்டிருப்பவர்களுக்கான சம்பளம், வாகனம் உள்ளிட்ட இதர செலவுகளுக்காக கோடிக் கணக்கில் மக்களின் வரிப்பணம் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவை எம்மால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டவை அல்ல என்பதே உண்மையாகும். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதாயின் எமது நாட்டுக்குள்ளேயே அதற்கு பல வழிகள் காணப்படுகின்றன. ஆனால் இந்து - லங்கா ஒப்பந்தம் காரணமாக இன்று தேசிய ஒற்றுமை எட்ட முடியாத ஒரு இலக்காக மாற்றப்பட்டுள்ளது.

வரவு-செலவுதிட்டத்தில் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கூடியளவு நிதி வீணாக மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இந்த நிலைமை எம்மால் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக எமக்கு பிரயோகிக்கப்படும் அழுத்தத்தினால் ஏற்பட்டவையாகும். இவற்றை விட மேலும் பல அநீதிகள் எமக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான வேலைத்திட்டங்கள் மூலமாகவே எனது நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தப்பட்டு எனது ஆளும்தரப்பு கலைக்கப்பட்டு கட்சியும் சீரழிக்கப்பட்டது. இது எவ்வாறு இடம்பெற்றது என்பதை நான் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தெரிவித்திருக்கின்றேன்.

ஆனால் யாராலும் அதனை வெளியில் கூற முடியாத நிலைமையே காணப்படுகிறது. தற்போது பிரதான சூத்திரதாரியைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிவார்கள். சகல அரசாங்கங்களும், இராணுவத்தினரும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிவார்கள். சூத்திதாரி எங்கிருக்கின்றார் எனக் கூறினாலும், எம்மால் அவர்களுடன் மோத முடியாது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2025இல் வெளியிடப்பெற்றது